# உரிமமற்ற 7 கடைக்காரர்களின் கடைகளை மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது!



நமது நிருபர்

கோலாலம்பூர், பிப்.25-

கோலாலம்பூர் மொத்த விலைச் சந்தையில் உரிமமின்றி வணிகத்தை மேற்கொண்டு வரும் சிறு வணிகர்களுக்கு 7 பறிமுதல் நடவடிக்கைகள், 3 அபராத நோட்டீஸ்களை மாநகர் மன்றம் விதித்தது. கோலாலம்பூர், பூசாட் பண்டார் உத்தாமா சுற்றுப் பகுதிகளில் வணிகத்தை மேற்கொண்டு வருபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டதாக மாநகர் மன்றம் தெரிவித்தது.

இந்நடவடிக்கையின் மூலம் கோலாலம்பூர் மொத்த விலைச் சந்தை சுற்றுப் பகுதியில் உரிமமின்றி வணிகம் செய்த வணிகர்களுக்கு 7 பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு 3 அபராத நோட்டீஸ்களும் விதிக்கப்பட்டன. இது 2016 சிறு வணிகர்கள் உரிமச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் பதிவு மற்றும் ஆவண நடவடிக்கைகளுக்காக கோலாலம்பூர், தாமான் மிஹார்ஜா செராஸ், ஜாலான் லொம்போங்கிலுள்ள பறிமுதல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன. இதன் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகள் அவ்வப்போது தொடரப்படும் என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.